# பொதுச் செயலாளர் மடல்



**அன்பார்ந்த பொறியாளர் சகோதர சகோதரிகளுக்கு வணக்கம் !**

சிறிய இடைவெளிக்குப் பிறகு இந்த மடல் வாயிலாக உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். நமது சங்கத்தின் 61வது பொதுக்குழுக் கூட்டத்தைப் பொறியாளர் தின விழாவுடன் சேர்த்து 24.09.2016 அன்று கோவையில் நடத்துவது எனச் செயற்குழுவில் முடிவு செய்யப்பட்டுள்ளது. பொதுக்குழுவில் நமது சங்கத்தின் கீழ்க்கண்ட கோரிக்கைகள் குறித்து விவாதிக்கவுள்ளோம்.

1. 7வது ஊதியக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் திருத்திய ஊதிய விகிதங்களை மத்திய அரசு அறிவித்துள்ளது. இதைத் தொடர்ந்து நாமும் நம்முடைய ஊதியம், குறிப்பாக உதவிப் பொறியாளர், உதவிக் கோட்டப் பொறியாளர், கோட்டப் பொறியாளர் ஆகியோர் ஊதிய விகிதங்கள், **TIME BOUND PROMOTION** தொடர்பான நியாயமான கோரிக்கைகளை அரசிடம் முன்வைத்தல்
2. இளநிலைப் பொறியாளர்கள் 10 ஆண்டுகள் அப்பதவியில் பணி செய்தால்தான் உதவிக் கோட்டப் பொறியாளராகப் பதவி உயர்வு பெறவியலுமாறு பணி விதிகளில் தக்க திருத்தம் பெறுதல்
3. துறையில் காலியாக உள்ள தலைமைப் பொறியாளர் பதவி முதல் உதவிக் கோட்டப் பொறியாளர் பதவி வரை அனைத்துப் பணியிடங்களையும் விரைவாக நிரப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்
4. உச்சநீதிமன்றத்தில் உள்ள சங்க வளாகக் கட்டட வழக்கு, ஊதிய வழக்கு ஆகியவற்றை வென்றெடுத்தல்
5. துறையினை மறுசீரமைத்தல்
6. கலந்தாய்வு முறையில் பணி மாறுதல்கள் வழங்குதல்
7. தற்போதைய தேவைகளுக்கு ஏற்ற வகையில் பணி விதிகளுக்குத் திருத்தம் பெறுதல்
8. பிரிவு அலுவலகங்கள் அனைத்திற்கும் பட்டதாரிப் பொறியாளர்களை மட்டுமே பணியமர்த்தல்
9. TNRDC, TNRIDC–யில் ஓய்வு பெற்ற பொறியாளர்கள் பணியமர்த்தப்படுவதற்குப் பதிலாக அப்பணியிடங்களில், பணியில் உள்ள பொறியாளர்களை அயற்பணியில் அமர்த்துதல்
10. PBMC, EPC போன்ற துறை வளர்ச்சியைப் பாதிக்கிற ஒப்பந்த முறைகளைத் தொடர வேண்டாமென்று அரசினை வலியுறுத்துதல்

இந்தக் கோரிக்கைகள் அனைத்தையும் வென்றெடுக்க வேண்டுமென்றால், முதலில் நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டும். அனைவரும் ஒன்றுபட்டுச் சங்கப் பொதுக்குழுக் கூட்டத்திற்கு வந்து நமது வலிமையை வெளிப்படுத்திட வேண்டும்.

சங்கத்தின் கோரிக்கையை ஏற்காமல் பொதுமாறுதல் காலம் முடிந்த பின்னர் பொறியாளர்கள் பலருக்குப் பணி மாறுதல்கள் வழங்கிச் சமீபத்தில்

ஆணையிடப்பட்டுள்ளது. அவ்வாணையால் ஒரு சிலர் மகிழ்ச்சியடைந்தாலும், வேறு சிலர் பாதிக்கப்படுள்ளது உண்மையே! நமது மாநிலத் தலைவர் பொறி. அ. வேங்கடாசலம் அவர்கள் முதன்மை இயக்குநர் அவர்களைச் சந்தித்துப் பணி மாறுதல் ஆணையால் பாதிக்கப்பட்டுள்ள பொறியாளர்களின் பாதிப்புகளை உடனடியாகக் களையுமாறும் பாதிக்கப்பட்டவர்கள் மனுவின் மீது மனிதாபிமான அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறும் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார். மேலும், விருப்ப மாறுதல் தொடர்பாக வந்துள்ள விண்ணப்பங்கள் மீது கனிவான நடவடிக்கைகளை மேற்கொண்டு உரிய ஆணைகள் வழங்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார். முதன்மை இயக்குநர் அவர்களும் சங்கத்தின் கோரிக்கைகளைப் பரிவுடன் பரிசீலிப்பதாக உறுதியளித்துள்ளார்.

தலைமைப் பொறியாளர் பொறி. வி. எஸ். தங்கவேலு அவர்களின் பணி நீட்டிப்பிற்கான கோப்பு பற்றிய செய்தி அறிந்தவுடன், பணி நீட்டிப்பு வழங்கிட வேண்டாம் என்று 27.07.2016 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் அவர்களுக்கும் சங்கத்தின் சார்பாக மின்னஞ்சல் வாயிலாகவும், கடிதம் வாயிலாகவும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளப்பட்டது. சங்கத்தின் கோரிக்கையை ஏற்றுப் பணி நீட்டிப்பு வழங்காமல் ஓய்வாணை வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் அவர்களுக்கும் சங்கம் மனதார நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

ஓய்வு பெறும் மூத்தப் பொறியாளர்கள் தமது சகோதர இளைய பொறியாளர்களை மனதில் நிறுத்திப் பணி நீட்டிப்பை / மறு பணியமர்வை அரசே வழங்க விரும்பினாலும் அதை மறுத்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு மூத்த உறுப்பினர்களை எதிர்த்தே போராடிக் கொண்டிருந்தால், மற்ற பொதுப் பிரச்சனைகளுக்காக நம் நேரத்தையும், நிதியையும் ஒதுக்குவது எவ்வாறு என்று அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் !

மூத்தப் பொறியாளர்கள் ஓய்வு பெறுவதை முன்னிட்டுப் பாராட்டு விழாக்கள் விமரிசையாக நடைபெறுவது நமக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. அந்த விழாக்களில் நமது சகோதரர்கள் பெருமளவில் கலந்துகொண்டு சிறப்பிப்பது ஓய்வு பெறும் பொறியாளர்கள் துறைக்கு ஆற்றிய நன்மைகளை எடுத்துக் கூறுவதாக அமைகின்றது. அத்துடன், சங்க வளர்ச்சிக்காக நிதியும் வழங்கினால் அந்த மூத்தப் பொறியாளர்களையும் விழா ஏற்பாடு செய்யும் சகோதரர்களையும் எதிர்காலம் வாழ்த்தும்! என்னதான் இருந்தாலும் அவர்களுடைய பதவி உயர்வுக்கு இந்தச் சங்கம் எங்கோ ஒரு மூலையில் இருந்துகொண்டாவது பாடுபட்டிருக்கும் தானே !!

நெடுஞ்சாலைத்துறையில் இன்றைய தேதியில் நான்கு தலைமைப் பொறியாளர் பணியிடங்கள் காலியாக உள்ளன. தலைமைப் பொறியாளர் பணியிடம் என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. மாநிலத்தின் அனைத்துப் பணிகளையும் தலைமைப் பொறியாளர்தான் ஆய்வு செய்து, இடையூறுகள் வரும்பொழுது தக்க வழிகாட்டுதல்கள் வழங்க வேண்டும். மாநிலத்தின் பொருளாதார முன்னேற்றம் என்பது பணிகள் நடைபெற்று முடிவதைச் சார்ந்தே உள்ளது. மேலும், 4 தலைமைப் பொறியாளர்களுக்குப் பதவி உயர்வு அளிப்பதனால் மொத்தம் 16 பொறியாளர்களுக்கு (நான்கு மடங்கு) பதவி உயர்வு கிடைக்கும். ஒவ்வொரு பொறியாளரும் தங்கள் முதல் பதவி உயர்வுக்காக (உதவிக் கோட்டப் பொறியாளர்) சுமார் 15 முதல் 20 வருடங்கள் வரை காத்திருக்கின்றனர். இவ்வாறு

நீண்ட காலம் பதவி உயர்வின்றி ஒரே பதவியில் பணி செய்து வருவதால் அவர்களுக்கு மன இறுக்கம் ஏற்பட்டுப் பணிகளில் தொய்வு ஏற்படுகிறது. இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு காலியாக உள்ள தலைமைப் பொறியாளர் பதவி மட்டுமின்றி மற்ற காலிப் பணியிடங்களையும் (க.கா.பொ, கோ.பொ, உ.கோ.பொ) பதவி உயர்வு மூலம் விரைவாக நிரப்புவதற்கு உரிய ஆணைகள் வழங்குமாறு தமிழக அரசையும், முதன்மை இயக்குநர் அவர்களையும் சங்கத்தின் சார்பாக வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

சங்கத்தின் பொதுக்குழு என்பது சங்க உறுப்பினர்கள் சந்திக்கிற பிரச்சனைகளைக் கலந்து பேசுவதற்கும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கும் ஆண்டிற்கு ஒருமுறை ஏற்பாடு செய்யப்படுகிற கூட்டம். அந்தக் கூட்டத்தில் உறுப்பினர்கள் பெருமளவில் கலந்து கொண்டு விவாதத்தில் பங்கேற்றுக் கருத்துக்களை வெளிப்படுத்தினால்தான் அடுத்த ஆண்டு சங்கம் பயணிக்க வேண்டிய திசையினைத் தீர்மானிக்க முடியும். அதை விடுத்து, அங்கொருவர் இங்கொருவராகச் சங்கத்தைப் பற்றியும் சங்க நடவடிக்கைகள் பற்றியும் பேசிக் கொண்டிருப்பது பயனற்றது. கோவைப் பகுதியில் உள்ள சங்கத்தின் மாநில செயற்குழு உறுப்பினர்கள் பொறிஞர் எல். அந்தோணிசேவியர் அவர்களும் பொறிஞர் ஜெ. முரளிகுமார் அவர்களும் பொதுக்குழுக் கூட்டத்திற்கு மிகுந்த அக்கறையுடன் ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். விரும்புகிறவர்கள் கோவைக்கு அருகில் உள்ள உதகமண்டலத்திற்கு இன்பச் சுற்றுலா சென்றுவரவும் அவர்கள் ஏற்பாடு செய்ய உள்ளார்கள். எனவே, சகோதர சகோதரிகள் பொதுக்குழுவில் கலந்து கொள்ள வருக, வருக, என்று அன்போடு அழைக்கிறேன்.

**நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம் வாழ்க !** **பொறியாளர் ஒற்றுமை ஓங்குக !!**

**அன்புடன்,**



**ஆர். தீபக்**

**<u>அண்மையில் பதவி உயர்வு பெற்ற கோட்டப் பொறியாளர்கள், உதவிக் கோட்டப் பொறியாளர்கள் கவனத்திற்கு !</u>**

அண்மையில் பதவி உயர்வு பெற்ற கோட்டப் பொறியாளர்களும் உதவிக் கோட்டப் பொறியாளர்களும் தங்கள் ஊதிய நிர்ணயத்தில் பிரச்சனைகளைச் சந்திப்பதாகக் கேள்விப்படுகிறோம். இந்தப் பிரச்சனைகள் எந்த அடிப்படையும் அற்றவை. 25.09.2015 அன்று நிதித்துறையால் வெளியிடப்பட்ட கடிதம் முழுக்க முழுக்க 22.07.2013–க்குப் பிறகு பணிக்குச் சேர்ந்த உதவிப் பொறியாளர்களைக் கருத்தில் கொண்டு வெளியிடப்பட்ட ஒன்று. மேலும் இதுகுறித்துச் சங்கம் தொடர்ந்த வழக்கில் மேற்கண்ட கடிதத்திற்கு மாண்புமிகு உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடையும் வழங்கியுள்ளது. தடையாணை நமது சங்க மார்ச்–2016 இதழில் வெளியிடப்பட்டுள்ளது. தடையாணையின் அடிப்படையில் சில இடங்களில் சரியான ஊதியமும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த விவரங்களை உரியவர்களுக்கு எடுத்துக்காட்டி உறுப்பினர்கள் தங்கள் ஊதிய நிர்ணயத்தைச் சரியான முறையில் பெற்றுக் கொள்ளலாம். இந்த விவரங்களை ஏற்காத கருவூல அதிகாரிகளிடமிருந்து எழுத்துப்பூர்வமாக மறுப்பினைப் பெற்று அனுப்பி வைத்தால் நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடர ஏதுவாக இருக்கும்.

## A Public Worker Should Accept No Costly Gifts
### – M.K. Gandhi, The Father of our Nation

On my relief from war-duty I felt that my work was no longer in South Africa but in India. Not that there was nothing to be done in South Africa, but I was afraid that my main business might become merely money-making. Friends at home were also pressing me to return, and I felt that I should be of more service in India. And for the work in South Africa, there were, of course, Messrs Khan and Mansukhlal Naazar. So I requested my co-workers to relieve me. After very great difficulty my request was conditionally accepted, the condition being that I should be ready to go back to South Africa if, within a year, the community should need me. I thought it was a difficult condition, but the love that bound me to the community made me accept it.

*'The Lord has bound me*
*With the cotton-thread of love,*
*I am His bondslave,'*

sang Mirabai. And for me, too, the cotton thread of love that bound me to the community was too strong to break. The voice of the people is the voice of God, and here the voice of friends was too real to be rejected. I accepted the condition and got their permission to go.

At this time I was intimately connected only with Natal. The Natal Indians bathed me with the nectar of love. Farewell meetings were arranged at every place, and costly gifts were presented to me.

Gifts had been bestowed on me before when I returned to India in 1899, but this time the farewell was overwhelming. The gifts of course included things in gold and silver, but there were articles of costly diamond as well.

What right had I to accept all these gifts? Accepting them, how could I persuade myself that I was serving the community without remuneration ? All the gifts, excepting a few from my clients, were purely for my service to the community, and I could make no difference between my clients and co-workers; for the clients also helped me in my public work.

One of the gifts was a gold necklace worth fifty guineas, meant for my wife. But even that gift was given because of my public work, and so it could bot be separated from the rest.

The evening I was presented with the bulk of these things I had a sleepless night. I walked up and down my room deeply agitated, but could find no solution. It was difficult for me to forgo gifts worth hundreds, it was more difficult to keep them.

And even if I could keep them, what about my children? What about my wife? They were being trained to a life of service and to an understanding that service was its own reward.

I had no costly ornaments in the house. We had been fast simplifying our life. How then could we afford to have gold watches? How could we afford to wear gold chains and diamond rings? Even then I was exhorting people to conquer the infatuation for jewellery. What was I now to do with the jewellery that had come upon me?

I decided that I could not keep these things. I drafted a letter, creating a trust of them in favour of the community and appointing Parsi Rustomji and others trustees. In

the morning I held a consulting with my wife and children and finally got rid of the heavy incubus.

I knew that I should have some difficulty in persuading my wife, and I was sure that I should have none so far as the children were concerned. So I decided to constitute them my attorneys.

The Children readily agreed to my proposal. 'We do not need these costly presents, we must return them to the community, and should we ever need them, we could easily purchase them,' they said.

I was delighted. 'Then you will plead with mother, won't you?' I asked them.

'Certainly,' said they. 'That is our business. She does not need to wear the ornaments. She would want to keep them for us, and if we don't want them, why should she not agree to part with them?'

But it was easier said than done.

'You may not need them.' said my wife. 'Your children may not need them. Cajoled, they will dance to your tune. I can understand your not permitting me to wear them. But what about my daughters-in-law? They will be sure to need them. And who knows what will happen tomorrow? I would be the last person to part with gifts so lovingly given.'

And thus the torrent of argument went on, reinforced, in the end, by tears. But the children were adamant. And I was unmoved.

I mildly put in: 'The children have yet to get married. We do not want to see them married young. When they are grown up they can take care of themselves. And surely we shall not have, for our sons, brides who are fond of ornaments. And if, after all, we need to provide them with ornaments, I am there. You will ask me then.'

'Ask you? I know you by this time. You deprived me of my ornaments, you would not leave me in peace with them. Fancy you offering to get ornaments for the daughters-in-law! You who are trying to make sadhus of my boys from today! No, the ornaments will not be returned. And pray what right have you to my necklace?'

'But,' I rejoined, 'is the necklace given you for your service or for my service?'

'I agree. But service rendered by you is as good as rendered by me. I have toiled and moiled for you day and night. Is that no service? You forced all and sundry on me, making me weep bitter tears, and I slaved for them!'

These were pointed thrusts, and some of them went home. But I was determined to return the ornaments. I somehow succeeded in extorting a consent from her. The gifts received in 1896 and 1901 were all returned. A trust-deed was prepared, and they were deposited with a bank, to be used for the service of the community, according to my wishes or to those of the trustees.

Often, when I was in need of funds for public purposes, and felt that I must draw upon the trust, I have been able to raise the requisite amount, leaving the trust money intact. The fund is still there, being operated upon in times of need, and it has regularly accumulated.

I have never since regretted the step, and as the years have gone by, my wife has also seen its wisdom. It has saved us from many temptations.

I am definitely of opinion that a public worker should accept no costly gifts.

**(From "An Autobiography or the story of my experiments with truth" The excerpts are published in commemoration of the 70th Independence Day.)**

## No Extension of services beyond superannuation ! Association requests the Government !

***[Copy of Letter No. 36 / ATNHE, Dated 27.07.2016 addressed to the Hon'ble Chief Minister and Hon'ble Minister for Highways]***

***Sub : Highways Department - Establishment - Tamil Nadu Highways Engineering Service - Extension of services beyond superannuation - not to be granted – orders requested***

We submit to state the following for the kind consideration and orders of Hon'ble Amma.

It is reliably learnt that Thiru.V.S.Thangavel, CE(C&M), Highways, due to retire from service on superannuation on 31.07.2016, has applied for extension of his services beyond his superannuation. The members of the Association are deeply concerned about the extension of services of Engineers, because it affects their promotion chances.

The practice of service extension was originally introduced during National Emergency in 1962-63. (Vide G.O Ms. No.290, Public (Service-A), dated 19.02.1963) as there was huge demand for large number of Technical Personnel at that time. The order was revoked after National Emergency had been lifted (vide G.O.Ms. No.2035, Public (services-A), department, dated: 28.10.1969). It was emphasized in the order that any re-employment in future should be considered only when there was dearth of qualified persons or when the person was of outstanding ability.

Tamilnadu, being a leader in most of the social and development indicators, has large number of qualified and competent technical personnel in all the departments. Our excellent academic institutions produce excellent engineers and the organizational setup of various departments hone their skills to carry out the programmes of Government. So, no individual is an indispensable member of the staff of the Department.

Moreover extension of services of individuals will affect the promotional prospects of employees down the hierarchy. It takes nearly 20 years on an average for an Assistant Engineer to get his first promotion and in general the prospects of promotion is not encouraging. This has already dented the morale of the Engineering Staff in the Department. It would be even more disheartening for the staff if services of individuals are retained after their superannuation. Also, it is against natural justice to deprive people of their right to get promotion.

In each case of service extension, it is not only the next man who misses promotion but several people miss consequential promotions all along the hierarchial strata. Therefore one person getting extension deprives many of their promotion order. Also extension of service would cause frustration and affect the morale of the entire staff in general.

In a similar situation in the year 2001, where a number of CE posts were vacant, Hon'ble Chief Minister, Amma then decided to post SE's to be in-charge of CE's; not to retain the services of any CE.

The Government of Tamilnadu, has also reiterated in its Letter, Ms. No. 1, Personnel and Administrative Reforms (Per-S), Department, dated:04.01.1993, that it is not desirable to grant extension of service or re-employment of retired employees. Only when there is dearth of qualified candidates and when a person is of outstanding ability, cases may be considered. Further Thiru.V.S.Thangavel, CE(C&M), has been in maintenance wing for many years and cannot claim that he has outstanding ability in Highways works. So, we request the Government not to encourage such selfish ventures.

Thousands of Civil Engineering graduates are coming out every year from various Engineering colleges in Tamilnadu with dreams of working in Government Departments. Extension of service to retiring Engineers would hamper the prospects of these budding Engineers and hence not good for the State's future.

Above all, cases like this would encourage personnel who are expecting favours like extension of service to adopt unholy and out of the way means to achieve their goal, which will malign the reputation of the Government.

Hence, the Association of Tamil Nadu Highways Engineers strongly appeals not to consider the application of Thiru.V.S.Thangavel for extension of his service.

**Thanking you,**

Yours faithfully,
Sd/..
**(General Secretary)**

## வழக்கு நிதி

01.07.2016 முதல் 01.08.2016 வரை பெறப்பட்ட வழக்கு நிதி விவரம்

| | | |
|---|---|---|
| பொறிஞர் கே. இளங்கோ, க.பொ [க (ம) ப], கோவை | ரூ. | 10,000/– |
| பொறிஞர் எஸ். பழனி, கோ.பொ (த.க), சென்னை | ரூ. | 50,000/– |
| விழுப்புரம் மண்டலப் பொறியாளர்கள் | ரூ. | 85,000/– |
| சேலம் மண்டலப் பொறியாளர்கள் | ரூ. | 2,75,000/– |
| தாராபுரம் கோட்டத்தைச் சார்ந்த பொறியாளர்கள் | ரூ. | 50,000/– |

நிதி வழங்கிய பொறியாளர்களுக்கும், நிதி பெற்றுத்தர முயற்சிகள் மேற்கொண்ட முன்னோடிகளுக்கும் சங்கம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் இரசீது, தொகையைத் தலைமைச் சங்க அலுவலகத்தில் சேர்த்தவர்களிடம் வழங்கப்பட்டுள்ளது. நிதி வழங்கிய உறுப்பினர்கள் அவர்களிடமிருந்து தங்களுக்குரிய இரசீதினைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**வழக்கு நிதி வழங்குவீர் !** **உரிமைகளைப் பாதுகாப்பீர் !!**

## Not to effect General Transfer after 31.05.2016 !
## Association requests the Director General !

***[Copy of Letter No: 16 / 2016-2, Dated: 18.07.2016 addressed to the Director General (Highways)]***

Sir,

**Sub : General Transfer – certain grievances – regarding**

**Ref : Our letter No.16/2016-1, dated 13.06.2016 addressed to the Chief Secretary and others with a copy to the Director General, Highways Department**

Kind reference is invited to our letter cited, wherein we requested that the General Transfer might not be effected for the sake of General Transfer. It was also represented that the Assistant Divisional Engineers and Assistant Engineers who have school going children would have paid the school fee and their children would be attending the classes. It was also added that many of the Assistant Divisional Engineers and Assistant Engineers are women and transfers at this point of time would affect them in more than one way. It was further brought to the notice that the psychology of small children would be adversely impacted because of the sudden change of place and environment.

In spite of our genuine representation, it is understood that a long list of Engineers is prepared for effecting general transfer. As the preparation of the list has been going on for the past 3 months, our members are seriously concerned about their transfers since then. This has put the entire Department in a volatile situation and is seriously affecting the progress of various ongoing works.

If at all, any transfers are to be effected due to compelling reasons, not for the sake of General Transfer alone, those can be done as early as possible so that the volatility in the Department may be ended. During effecting transfers, due consideration may be given to humanitarian reasons and the officers who hold non sensitive posts, women officers, spouses working in the same stations etc., may please be exempted.

Hence, we request to consider the above grievances favourably.

Thanking you,

Yours faithfully,
**Sd/..**
**President**

**சங்கக் கட்டட வழக்கு – இன்றைய நிலை !**

சங்கக் கட்டடம் அமைந்துள்ள இடம் தொடர்பாகச் சிலர் வழக்குத் தொடர்ந்ததும் அந்த வழக்கில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் நமக்குச் சாதகமாக தீர்ப்பளித்ததும் நாம் அறிந்ததே. தீர்ப்பினைத் தொடர்ந்து முதலில் வழக்குத் தொடர்ந்தவர்கள் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். மேற்கண்ட சங்கக் கட்டடம் தொடர்பான வழக்கு **26.07.2016** அன்று உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்து அனைத்துத் தரப்புகளும் ஆவணங்களைப் பதிவு செய்திருந்ததைச் சரிபார்த்த பின் உச்ச நிதிமன்ற பென்ச் முன் **06.09.2016** அன்று விசாரணைக்குப் பட்டியலிட ஆணையிடப்பட்டுள்ளது. அந்த நேரத்தில் வழக்குரைஞர்களை நியமித்து வாதங்களை வைக்க வேண்டியுள்ளது. வழக்குச் செலவினைச் சரிகட்டுவதற்கு பெருமளவில் நிதி தேவைப்படுகிறது. உறுப்பினர்கள் நிதி வழங்குவதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## Administrative Sanction and Technical Sanction powers of officers! Association requests the Director General to obtain the orders of Government enhancing the powers !

[Copy of Letter No. 49 / 2016, Dated: 05.08.2016]

**Sub** : Administrative Sanction and Technical Sanction powers of officers of Highways Department - enhancement of powers - requested

**Ref** : Various Government Orders issued from time to time

We wish to state that the technical sanctioning powers of the officers of Highways Department viz. Assistant Divisional Engineer, Divisional Engineer, Superintending Engineer and Chief Engineer have been enhanced from time to time with regard to road and bridge works. Whereas the powers with regard to works such as construction of buildings, building maintenance, electrical repairs, purchase of tools and plants, purchase of office furniture, purchase of stores, repairs to plants etc., have not been enhanced for many years.

The cost of repairs and purchase have gone up manifold since the Government orders fixing the powers for the above items were issued. As there is no clarity in the actual position of the powers, the officers of the department, particularly the Divisional Engineers are at times misled by their offices while sanctioning the above works.

We enclose the statement containing the details of sanctioning powers of officers with regard to various works as prevailing now. The powers indicated therein may not reflect the actual situation because those details have been collected from different sources.

We request to obtain the orders of Government enhancing the powers of officers of Highways Department in line with the present actual requirements.

Thanking you,

Encl: Statement

Yours faithfully,
**Sd/..**
**President**

## C. POWERS OF THE ENGINEERS IN HIGHWAYS DEPARTMENT

| No. | Brief Description | C.E (H) | S.E (H) | D.E (H) | ADE (H) | Authority |
|---|---|---|---|---|---|---|
| **I. TO ACCORD ADMINISTRATIVE APPROVAL** | | | | | | |
| a. | Works other than residential buildings excluding electrical installation | Rs.2.00 lakhs | Rs.50,000/- | Rs. 20,000/- | -- | GO.Ms.No.953/TD, dt:04.06.1987 |
| b. | i. Electrical works in non residential buildings additions | Rs. 20,000/- | Rs. 10,000/- | Rs. 5,000/- | -- | GO.Ms. NO.1600/PWD, dt:11.10.1973 |
| | ii. Electrical works in residential buildings additions | Rs. 10,000/- | Rs. 4,000/- | Rs. 2,000/- | -- | GO.Ms. No. 1600/PWD, dt:11.10.1973 |
| c. | Contribution works | Rs. 40,000/- | Rs. 15,000/- | Rs. 7,500/- | -- | GO.Ms. No. 1600/PWD, dt:11.10.1973 |
| d. | Purchase of Tools and plants (within the limit of Budget allotment) | Full powers | Rs. 25,000/- | RS. 15,000/- | Rs. 2,000/- | GO.Ms. No. 953/TD, dt:04.06.1987 |
| e. | Purchase of office furniture (subject to Budget provision & obtaining Government Order in individual case) | Rs. 10,000/- | Rs. 5,000/- | Rs. 2,500/- | Rs. 500/- | GO.Ms. No. 953/TD, dt:04.06.1987 |
| f. | Purchase of stores | -- | RS. 50,000/- | Rs. 5.00 lakh | Rs. 1,000/- | GO.Ms.No.953/T.D, dt: 04.06.1987 & GO.Ms.No.193/fin (Salaries) dt:16.03.1995 & Government Finance (Salaries) Department Letter No.52836/ Salaries/999, dated: 16.06.2000 |
| g. | Construction of quarters for employees in inferior service | -- | -- | Rs. 10,000/- | -- | GO.Ms.No.953/T.D, dt: 04.06.1987 & GO.Ms.No.193/fin (Salaries) dt:16.03.1995 |
| h. | According permission for excavation of original works under repairs grant under exception clause (Para 108 of Tamil Nadu HMV IV) | -- | Rs.2.00 lakhs | – | – | GO.Ms.No.166/ PWD/HW Dept, dt: 03.02.1993 |
| **Note:** | | | | | | |
| 1. | For National Highways Works, no powers to the State Officers for administrative approval | | | | | |
| 2. | During execution of works by this department particularly bridge works, Revised Administrative Sanction is required for certain works due to changes in design, increase in cost of construction materials or due to additional items involved. In order to avoid the delay in issue of revised administrative sanction for individual works by scrutinising on case to case basis the Government has formed committee involving various officials at Government level vide G.O No.289 dated: 04.12.2008. | | | | | |

## II.TO ACCORD TECHNICAL SANCTION

| No. | Brief Description | C.E (H) | S.E (H) | D.E (H) | ADE (H) | Authority |
|---|---|---|---|---|---|---|
| a | Original work (Roads & Bridge work) | Full powers | Rs. 200.00 lakhs | Rs.50.00 lakhs | Rs. 20,000/- [C.E's (Genl) Pro. No. 40824/ Opp-1/ 2000-7, dt:08.01.2001 & 13.07.2001] | G.O.Ms.No.80/ Highways (H.N.I)Dept, Dated:28.03.2007 |
| b. | Electrical works to buildings | Full powers | Rs.40,000/- | RS.15,000/- | -- | GO.Ms.No.1600/ PWD, dt:11.10.1973 & GO.Ms.No.953 / TD, dt:04.06.1987 |
| c. | Repairs to building | -- | -- | Ordinary Repairs- Rs.6,000/- Special Repairs - Rs.50,000/- | – | GO.Ms.No.1600/PWD, dt:11.10.1973 |
| d. | Regular repairs of Special Tools and Plants (other than running or working expenses) | -- | Rs.10,000/- | Rs.10,000/- Para 291'a' of Highways Manual Vol.IV | Rs. 5,000/- Para 291'b' of Highways Manual Vol.IV | GO.Ms.No.953 / TD, dt: 04.06.1987 |
| e. | Maintenance of ordinary Tools and Plant (Annual Maintenance) | -- | Full powers | Rs. 5,000/- | -- | GO.Ms.No.953/TD, dt:04.06.1987 |
| f. | Ordinary Maintenance of Special Tools and Plant like lorries, power rollers etc., (Annual Maintenance) | -- | HM Vol.IV Para 295 | Rs.60,000/- | -- | GO.Ms.No.953/TD, dt:04.06.1987 |
| g. | Maintenance of roads | -- | -- | Full power | -- | Para 301 'a' of Highways Manual Vol.IV, based on the mileage rate fixed by the Superintending Engineer |

**Note:-** Estimates for Bridge works more than Rs.200.00 Lakhs, the Chief Engineer,Planning, Investigation & Designs has to give technical approval for the estimate duly preparing the detailed estimate, drawings and designs for the bridge portion. The Chief Engineer concerned with the work has to prepare all other sub estimates such as formation of approaches, protective works etc., at their level and to give technical sanction for the whole job according to the Administrative Sanction. (Govet.Lr.No.13754/HN 1 / 2003 3 , dt: 29.10.2003)

## தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம்
## 5வது மாநில செயற்குழுக் கூட்டத்தின் தீர்மானங்கள்

5வது மாநில செயற்குழுக் கூட்டம் தலைவர் பொறிஞர் அ. வேங்கடாசலம் அவர்களின் தலைமையில் நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கத்தில் 30.07.2016 அன்று மாலை 3.00 மணியளவில் நடைபெற்றது. சமீபத்தில் இயற்கை எய்திய பொறிஞர் வி. சண்முகவேல், உதவிப் பொறியாளர் (நெ), கட்டுமானம் (ம) பராமரிப்பு, திருமங்கலம், பொறிஞர் பி. வி. கிருஷ்ணமூர்த்தி, உதவிக் கோட்டப் பொறியாளர் (நெ), வால்பாறை ஆகியோரின் ஆன்மா சாந்தியடைய 2 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

| | | |
|---|---|---|
| 1 | பொறிஞர் ஆர். தீபக் | பொதுச் செயலாளர் |
| 2 | பொறிஞர் எம். எச். சையது இப்ராஹிம் | செயலாளர் |
| 3 | பொறிஞர் பி. தனசீலன் | செயலாளர் |
| 4 | பொறிஞர் எஸ். கண்ணன் | பொருளாளர் |
| 5 | பொறிஞர் எல். அந்தோணிசேவியர் | உறுப்பினர் |
| 6 | பொறிஞர் பி. அருண்பிரசாத் | உறுப்பினர் |
| 7 | பொறிஞர் இ. பாலசுப்ரமணியன் | உறுப்பினர் |
| 8 | பொறிஞர் என். ஜாகிர் உசேன் | உறுப்பினர் |
| 9 | பொறிஞர் ஜெ. முரளிகுமார் | உறுப்பினர் |
| 10 | பொறிஞர் இ. ராஜ்குமார் | உறுப்பினர் |
| 11 | பொறிஞர் எஸ். ராமநாதன் | உறுப்பினர் |
| 12 | பொறிஞர் ஆர். ரவி | உறுப்பினர் |
| 13 | பொறிஞர் எஸ். சுவாமிநாதன் | உறுப்பினர் |
| 14 | பொறிஞர் எஸ். சேதுராமன் | உறுப்பினர் |
| 15 | பொறிஞர் இ. தேன்மொழி | உறுப்பினர் |
| 16 | பொறிஞர் எஸ். திராவிடமணி | உறுப்பினர் |
| 17 | பொறிஞர் கே. யோகேஷ் | உறுப்பினர் |

**விவாதங்களுக்குப் பிறகு செயற்குழுவில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.**

1. சங்கத்தின் 61வது பொதுக்குழுக் கூட்டத்தை 24.09.2016 அன்று கோவையில் நடத்துவது என்றும் இக்கூட்டத்துடன் பொறியாளர் தின விழாவினையும் சிறப்பாக நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. பொதுக்குழுவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செயற்குழு உறுப்பினர்கள் பொறிஞர் எல். அந்தோணிசேவியர் அவர்களும் மற்றும் பொறிஞர் ஜெ. முரளிகுமார் அவர்களும் மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டது.

2. உதவிக் கோட்டப் பொறியாளர் பதவி உயர்வுக்கான Estimate Vacancy விரைவாகத் தயார் செய்து அரசாங்கத்திடமிருந்து ஒப்புதல் பெறும்படி முதன்மை இயக்குநர் அவர்களிடம் முறையிடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

3. சங்க கட்டடப் பராமரிப்புச் செலவும், நிர்வாகச் செலவும் அதிகமாகிவிட்டபடியால் அறைகளுக்கான கட்டட நன்கொடை கீழ்க்கண்டவாறு உயர்த்துவது என்றும் dormitory அறை தவிர்த்து மற்ற அறைகள் அனைத்திலும் குளிர்சாதன வசதியை ஏற்படுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. வரும் **01.09.2016** முதல் கட்டண உயர்வினை அமல்படுத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| AC Room (Member) | = | Rs. 500/- |
| AC Room (Non Member) | = | Rs. 700/- |
| Dormitory (Member) | = | Rs. 250/- |
| Dormitory (Non Member) | = | Rs. 350/- |

4. ENWELF மற்றும் General Fund ஆகியவற்றில் உள்ள சுமார் 17 லட்ச ரூபாய் நிரந்தர வைப்புத் தொகையைத் திரும்பப் பெற்றுச் சங்கத்திற்கெனச் சொந்தமாக நிலம் வாங்குவது தொடர்பாகப் பொதுக்குழுவில் விவாதித்து முடிவு செய்வது என்று தீர்மானிக்கப்பட்டது. நிலத்தைத் தேர்வு செய்வதற்குச் செயற்குழு உறுப்பினர்கள் பொறிஞர் எஸ். சேதுராமன், பொறிஞர் பி. தனசீலன், பொறிஞர் இரா. ரவி, பொறிஞர் இ. ராஜ்குமார் ஆகியோர் கொண்ட குழு நியமிக்கப்பட்டது.

5. Whatsapp, Facebook ஆகியவற்றில் பொறிஞர் ஆர். முருகேசன், துணைத் தலைவர் பதிவிட்ட கண்ணியக் குறைவான பதிவுகளைச் சங்கம் கவனத்துடன் குறித்துக் கொண்டு எதிர்காலத்தில் பொறிஞர் ஆர். முருகேசன் இதுபோன்ற செயல்களுக்கு இடங்கொடுக்கக் கூடாது என்று சுட்டிக்காட்டப்பட்டது.

6. சங்கத்தின் கோரிக்கையினை ஏற்றுத் தலைமைப் பொறியாளர் பொறிஞர் வி. எஸ். தங்கவேல் அவர்களுக்குப் பணி நீட்டிப்பு மறுத்தமைக்குச் சங்கத்தின் சார்பாகத் தமிழக அரசுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

7. சங்க வளாகக் கட்டட வழக்கு, பொறியாளர்களின் ஊதிய உயர்வு வழக்கு ஆகியவை உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்றுவரும் சூழ்நிலையில் சங்கத்திற்கான வழக்கு நிதியைப் பெருமளவில் திரட்டித் தரும்படி செயற்குழு உறுப்பினர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

**பொறிஞர். அ. வேங்கடாசலம்**
தலைவர்

**பொறிஞர். ஆர். தீபக்**
பொதுச்செயலாளர்

## வாழ்த்துகிறோம் !

- **பொறிஞர் வி. எஸ். தங்கவேல்,** தலைமைப் பொறியாளர், க (ம) ப, சென்னை
- **பொறிஞர் பி. மனோகரன்,** சிறப்புத் தலைமைப் பொறியாளர், திட்டங்கள், சென்னை
- **பொறிஞர் டி. ராஜேந்திரன்,** சிறப்புத் தலைமைப் பொறியாளர், தே.நெ, மதுரை
- **பொறிஞர் எம். வில்லாளன்,** சிறப்புத் தலைமைப் பொறியாளர், க (ம) ப, திருச்சி
- **பொறிஞர் வி. பாலசுப்ரமணி,** கண்காணிப்புப் பொறியாளர், ந (ம) கி.சா, திருச்சி
- **பொறிஞர் கே. புகழேந்தி,** கோட்டப் பொறியாளர், க (ம) ப, கடலூர்
- **பொறிஞர் பி. அருள்செல்வன்,** கோட்டப் பொறியாளர், திட்டங்கள், சேலம்
- **பொறிஞர் கே. ஆறுமுகசாமி,** கோட்டப் பொறியாளர், ந (ம) கி.சா, திருச்சி
- **பொறிஞர் எஸ். ராமச்சந்திரன்,** கோட்டப் பொறியாளர், த.நா.சா.மே.தி, தூத்துக்குடி

ஆகியோர் 31.07.2016 அன்று அரசுப் பணியினை நிறைவு செய்தனர்.
இவர்கள் நலன்கள் பல பெற்றுப் பல்லாண்டு வாழ்க எனச் சங்கம் வாழ்த்துகிறது



# கிரஹாம் – ஓர் அதிசயப் பிறவி

**பொறிஞர் ப. யுகானந்த், எம்.இ.,**
**உதவிக் கோட்டப் பொறியாளர் (நெ),**
**திட்டங்கள், உடுமலை**
**yugananthp.blogspot.in**

ஒவ்வோர் ஆண்டும், நம் நாட்டில், சனவரி முதல் வாரத்தில் அனுசரிக்கப்படும் ‘‘சாலைப் பாதுகாப்பு வாரம்’’, துண்டு பிரசுரங்களைக் கொடுத்தோ அல்லது வாகனங்களின் முகப்பு விளக்கின் மத்தியில் கருப்புக் காகிதம் ஒட்டியோதான் கடைபிடிக்கப்படுகிறது.

ஆனால் ஆஸ்திரேலியா நாட்டில், இந்த ஆண்டு, நம்ப முடியாத ஒரு வாழ்வாதாரச் சிற்பம், சாலைப் பாதுகாப்புப் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டுள்ளது.

சாலையில் விபத்துக்களில் சிக்கி பாதிப்புகள் ஏதுமின்றி உயிர்மீள வேண்டுமெனில் மனிதன் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற வகையில் இந்த வித்தியாசமான உருவம் சிலிக்கான், கண்ணாடியிழைகள், பசை மற்றும் மனிதமுடி ஆகியவற்றைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. நம் சாலைகளில் வாழும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள ஒரே நபர். அவரது பெயர் கிரஹாம்.



படம்– 1 கிராஹாமின் முழுத்தோற்றம்

ஆஸ்திரேலியாவில் விக்டோரியா மாநிலத்தின் நூலகத்தில் தற்போழுது வைக்கப்பட்டுள்ள கிரஹாமைப் பார்ப்பவர்கள் முதலில் முகம் சுளிப்பார்கள். பிறகு ஆச்சரியமடைவார்கள். ஏனெனில், கிரஹாம் மனிதனின் சாயலாக இருந்தாலும், மனிதன் அல்ல.

பாட்ரிசியா பிசினினி (Patricia Piccinini) என்ற பெண் கலைஞரால் செதுக்கப்பட்ட இந்த விநோதமான மனித உருவம், சாலைப் பாதுகாப்பு விதிகள் குறித்த விழிப்புணர்வுக்காக உருவாக்கப்பட்டுள்ளது. மெல்போர்ன் ராயல் மருத்துவமனையின் மருத்துவ நிபுணர் கிறிஸ்டியன் கென்பீல்டு (Christian Kenfield), மோனாஷ் விபத்து ஆராய்ச்சி மையத்தின் விபத்துப் புலனாய்வாளர் டேவிட் லோகன் (David Logan) ஆகியோர் கிரஹாமை உருவாக்க பாட்ரிசியாவுக்கு உதவி செய்திருக்கிறார்கள்.

ஹெல்மெட் போன்ற தலையும் காணாமல் போன கழுத்துமாக ஒருவித அச்சத்தை இந்த உருவம் தந்தாலும், ஒரு கார் விபத்து ஏற்பட்டால், எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. அதாவது, கிரஹாம் போல் உடலமைப்புடன் உள்ள ஒரு மனிதன், சாலை விபத்தைச் சந்திக்க நேர்ந்தாலும், எவ்விதப் பாதிப்புமின்றி உயிர் வாழ முடியும் என்பதன் நோக்கமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இன்று சாலைப் பாதுகாப்பு குறித்து பெரிதாக யாரும் அக்கறை கொள்வதில்லை. வாகன ஓட்டிகளும் பாதசாரிகளும் பொறுப்பற்றவர்களாக நடந்து கொள்கிறார்கள்.

இதனால்தான் அதிக விபத்துகள் நிகழ்கின்றன. வேகம் என்பது இளைஞர்களின் தகுதியாக மாறி வருகிறது. அதிவேகம் சிலவேளைகளில் கட்டுப்பாட்டை இழந்து பெரிய விபத்தை ஏற்படுத்தி விடுகிறது. அதேபோல் சாலையைக் கடந்து செல்பவர்கள் மொபைல் போனில் பேசிக்கொண்டோ, விளையாடிக்கொண்டோ சாலைகளைக் கடக்கிறார்கள். ஒருவேளை விபத்தில் சிக்கி, உயிர் பிழைக்க நேர்ந்தால், நாமும் கிரஹாமைப் போலத்தான் இருப்போம் என்பதைச் சொல்வதற்காகத்தான் இந்தச் சிலையை வடிவமைத்திருக்கிறோம்; சாலைகளில் வேகமாக வாகனங்களை ஓட்டும்போதும் சாலைகளைக் கடக்கும்போதும் கிரஹாம் நம் கண் முன் வந்து, தவறு செய்யவிடாமல் பாதுகாப்பார் என்கிறார் ஆஸ்திரேலியாவின் போக்குவரத்து விபத்துப் பிரிவின் தலைவர் ஜோ கலாபியோர் (Joe Calafiore)

விபத்து ஏற்பட்டால் கபாலம் முன்னோக்கி நகர்ந்துவிடும். உடல் தூக்கி வீசப்படும்போது பின் மண்டையும் நொறுங்கும்; கழுத்துப்பகுதி காணாமல் போகும் என்பதால் இப்படி வடிவமைத்திருக்கிறோம் என்கிறார் மருத்துவர் கென்ஃபீல்டு. ஆகஸ்ட் 8–ம் தேதி முதல் ஆஸ்திரேலியா முழுவதும் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வுக்காக கிரஹாம் பயணம் மேற்கொள்ள இருக்கிறார்.

**கிரஹாமின் சில குணாதிசயங்கள்:**

- கடினமான வட்ட வடிவத்தலை விபத்து ஏற்பட்டாலும் நொறுங்காத வகையில் உள்ளதால், தலையினுள் உள்ள மூளை முற்றிலும் பாதுகாக்கப்படும்
- கழுத்து எழும்புகள் பாதிக்கப்படும் என்பதால் கழுத்தே கிடையாது. தலை நேரடியாக உடலுடன் இணைக்கப்பட்டுள்ளது
- காது, மூக்கு ஆகியவை வெளியே நீட்டிக் கொண்டிருந்தால் பாதிக்கப்படும் என்பதால் காதுகளும் மூக்கும் தட்டையாக்கப்பட்டுள்ளன
- ஒவ்வொரு விலா எலும்பிற்கும் இடையே பாதுகாப்பிற்காகக் காற்றுப்பைகள் வைக்கப்பட்டடுள்ளன
- தடிமனான கடுமையான தோல் எலும்புகளைக் காப்பாற்ற அமைக்கப்பட்டுள்ளன
- அவரது முழங்கால்களை 360° கோணத்திலும் திருப்ப முடியும்
- முழங்காலுக்குக் கீழ், பாதத்திற்கும் மேல் உள்ள பகுதி, எந்தத் திசையிலும் திரும்பிக் கொள்ளும் வகையில் பந்துக் கிண்ண மூட்டுகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது (பார்க்க : படம்–2)



படம் – 2 கிரஹாமின் பக்கவாட்டுத் தோற்றம்

வித்தியாசமான தோற்றத்தின் காரணமாக, கிரஹாமின் படங்கள் இணைய தளத்தில் அதிகமாக பரப்பப்பட்டு வருகின்றன. அத்துடன் நில்லாமல், அவரின் பயமுறுத்தும் உடலமைப்பைப் பார்த்துச் சாலையில் விபத்துக்களும், உயிரிழப்புகளும், ஆஸ்திரேலியாவில் மட்டுமல்லாது இந்தியாவிலும் குறையட்டும்.

நம் உயிரும், நம் உடல் உறுப்புகளும் விலை மதிக்க முடியாதவை. நம்மை நம்பியே நமது குடும்பமும், நமது சமுதாயமும் உள்ளன என்பதைச் சாலைப் பயன்பாட்டாளர்கள் ஒவ்வொருவரும் உணர்ந்தால் சாலையில் விபத்துக்களை நம்மால் தவிர்க்க இயலும்.



## நீலகிரி மாவட்டம்

**பொறிஞர் பாபு சந்திரசேகர், பி.இ.,**
**கண்காணிப்புப் பொறியாளர் (ஓய்வு),**
**நெடுஞ்சாலைத் துறை,**
**36, கவரை தெரு, சைதாப்பேட்டை, சென்னை–15**

நீலகிரி மாவட்டம், உள்ளத்தைக் கவரும் தன்மை வாய்ந்த மாவட்டம்; உயர்ந்த கம்பீரமான குன்றுகள், நெடிதுயர்ந்து நிழல் தரும் மரங்கள், எண்ணற்ற சோலைகள், ஓடைகள், நீர்வீழ்ச்சிகள், பார்ப்போர் மனதைக் கவரும் பள்ளத்தாக்குகள் அமைந்த எழில் மிகுந்த நீலகிரி மாவட்டத்தின் வரலாறு இதோ!

**ஜான் சுல்லீவன்**

திப்பு சுல்தான் ஆளுகையில் இருந்த இந்தப் பகுதி 1789–ல் கோவை மாவட்டத்தின் பகுதியாக இணைக்கப்பட்டது. சென்னையில் எழுத்தராகப் பணியில் சேர்ந்து, 1814–ல் கோவை மாவட்ட ஆட்சித்தலைவரான ஜான் சுல்லீவன் அவர்களின் பங்களிப்பு நீலகிரிப் பகுதிக்கு அதிகம். நீலகிரியில் முதலில் குடியேறிய ஐரோப்பியர் இவர்தான். வயநாட்டிலிருந்து மலபார், மைசூர் பக்கம் செல்லும் சாலைகளை இவர் அமைத்தார். மேலைநாட்டு காய்கறிகள், மலர்கள், பழமரங்கள் இவரால்தான் அறிமுகம் செய்யப்பட்டன. இவரின் முயற்சியால் குன்னூர்– மேட்டுப்பாளையம் மலைப் பாதை 1832ல் அமைக்கப்பட்டது. பிப்ரவரி 1882–ல் நீலகிரி மாவட்டம் உருவாக்கப்பட்டு, திரு. பார்லோ அவர்கள் முதல் மாவட்ட ஆட்சித்தலைவராக நியமிக்கப்பட்டார்.

**வானிலை**

உதகமண்டலத்திலும், குன்னூரிலும் வானிலை ஆய்வுக்கூடங்கள் உள்ளன. குன்னூரில் 86 நாட்களும், தேவாலாவில் 141 நாட்களும் சராசரியாக மழை பெய்யும். நீலகிரி மாவட்டத்தில் 04.07.1901 அன்று மிக அதிக அளவாக 385 செ.மீ மழை பெய்துள்ளது.

**பள்ளத்தாக்குகள்**

நீலகிரி மாவட்டத்தில் பவானி பெரிய பள்ளத்தாக்கு, மோயார் பெரிய பள்ளத்தாக்கு, கபினி பெரிய பள்ளத்தாக்கு, சாலியார் பெரிய பள்ளத்தாக்கு என நான்கு பெரிய ஆற்றுப்பள்ளத்தாக்குகள் உள்ளன.

**பழங்கள்**

1820–ல் உருளை சாகுபடி ஜான் சுல்லீவன் அவர்களால் இங்கே அறிமுகப்படுத்தப்பட்டது. 1855–ல் ஆப்பிள், பீச், பியர், மல்பெரி, அத்திப்பழம், ஆப்ரிக்காட், ஸ்ட்ராபெரி, ஆரஞ்சுகள், துரியன், அவக்காடோ போன்ற பழ விதைகள் இங்கிலாந்திலிருந்து வரவழைக்கப்பட்டுப் பயிர் செய்யப்பட்டன.

**தேயிலை**

1839–ல் தேயிலைத் தோட்டங்கள் உருவாகின. தோட்டச் சொந்தக்காரர்களின் பிரதிநிதியாக, அவர்களுடைய உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யவும், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதை அதிகப்படுத்தவும் 28.08.1893 அன்று United Blenders Association of Southern India ஏற்படுத்தப்பட்டது. இலங்கையில் இருந்து வந்தவர்களின் மறுவாழ்விற்காக TamilNadu Tea Plantation Corporation Limited

அமைக்கப்பட்டது. தேயிலையைப் பறிப்பதற்கு அதிகத் திறமை வேண்டும். தேயிலைச் சாகுபடிக்கு நிழல் கொடுக்கும் மரங்களை ஒழுங்கான முறையில் பராமரிப்பது மிகவும் அவசியம்.

**பிற பயிர்கள்**

1838–ல் திரு. டாசான் என்பவர் குன்னூரில் முதல் காப்பித் தோட்டம் அமைத்தார். 1878–ல் நீலாம்பூர் அருகில் ரப்பர் மரங்கள் முதன்முதலாக நடப்பட்டன. 1860–ல் சிங்கோனா இங்கு வேர் ஊன்றியது. 1843–ல் நீலகிரி மரங்கள் (யூகலிப்டஸ்) இங்கு நடப்பட்டன. குன்னூரில் சூடமரங்கள் உள்ளன. நீலகிரியில் பயிரிடப்படும் இலவங்கம் இலங்கையில் இருந்து வந்தது.

**திட்டங்கள், தொழில்கள்**

1908–ல் காட்டேரியில் முதல் நீர்மின் திட்டம்
1933–ல் பைக்காரா நீர் மின் நிலையம்
1952–ல் மோயார் நீர் மின் திட்டம்
1954–ல் குந்தா நீர் மின் திட்டம்
1943–ல் குன்னூரில் பட்டுப்புழு வளர்ச்சிப்பண்ணை
1960–ல் மசினகுடியில் பட்டுப்புழு வளர்ச்சிப்பண்ணை
1901–ல் அரவங்காட்டில் வெடி மருந்து தொழிற்சாலை
1966–ல் இந்துஸ்தான் ஒளி படச்சுருள் தயாரிப்பு நிறுவனம்

**ரயில்**

தலைமைப் பொறியாளர் திரு. வைட்மேன் அவர்களால் 1898–ல் மலை ரயில் பாதை கட்டுமானப் பணி மேட்டுப்பாளையத்திலிருந்து குன்னூர் வரை முடிவடைந்தது. 1908–ல் தலைமைப் பொறியாளர் திரு. சைக்ஸ் அவர்கள் மேற்பார்வையில் ஊட்டி வரை இந்த ரயில் பாதை நீட்டிப்பு செய்யப்பட்டது.

**சாலைகள்**

1822–ல் கோத்தகிரி மலைப்பாதையும், 1870–ல் நடுவட்டத்தையும், உதகமண்டலத்தையும் இணைக்கும் மலைப்பாதையும் மேம்பாடு செய்யப்பட்டன. உதகமண்டலத்தையும் கோழிக்கோட்டையும் இணைக்கும் சிஸ்பரா மலைப்பாதை 1832–லும், கூடலூர் தெப்பக்காடு சாலைப்பாலம் 1867–லும், கூடலூர் மலைப்பாதை 1868–லும் அமைக்கப்பட்டன.

**மலைகளின் அரசி எனப்படும் நீலகிரியில் உள்ள முக்கிய ஊர்கள்**

**அதிகாரெட்டி** – லிங்கத்தை வழிபடும் லிங்காயத்துக்கள் அதிகம் வாழும் ஊர்

**ஆணைக்கட்டி** – படகர்கள் இதனை குதிரையின் இடுங்கிய கணவாய் என அழைக்கின்றனர்; அழகான நீர் வீழ்ச்சிகள் இங்கு உள்ளன

**அணிக்கோரை** – இங்கு ஓர் அதிசயத்தால் பாம்பு பாறையாக மாறி இருப்பதாக மக்கள் நம்புகின்றனர்; இந்த மாவட்டத்தில் முதன் முதலாக 1854–ல் ஆரம்பப்பள்ளி துவக்கப்பட்ட ஊர்; அப்போது அதன் பெயர் சம்பள முடிவுப் பள்ளி (Salary Result School)

**அரவங்காடு** – இங்கு அரண்மனை சாராய வடிப்பாலை 1857–ல் நிறுவப்பட்டது; இங்கு வெடிமருந்து தொழிற்சாலை உள்ளது; சுரங்க வெடி பரப்பும் படை வீரர்களால் குன்னூரில் இருந்து உதகைக்கு சாலை போடப்பட்டது

**அரவேணு** – படகர் மொழியில் அரே என்பதன் பொருள் பாறைகளும், கற்பாளங்களும் என்பதாகும்; திரு. காக்பர்ன் ஐ.சி.எஸ் அவர்களின் மனைவியின் பெயரால் காத்தரின் நீர் வீழ்ச்சி இங்கு உள்ளது

**அவலாஞ்சி** – அவலாஞ்சி என்ற பெயர், அந்த நாட்களில் ஏற்படுத்தப்பட்ட அஞ்சலகத்திலிருந்து வந்த முதல் கடிதம் அல்லது கன்னடப் பெயர் அபலாஞ்சியிலிருந்து

வந்தது எனத் தெரிகிறது; 1824ல் பெய்த கன மழையால் இந்தப் பெயர் வந்தது; அவலாஞ்சி, எமரால்டு ஆறுகளின் குறுக்கே 1961–ல் அணைக்கட்டு கட்டப்பட்டது

**பர்லியார்** – இதன் அருகே ஓடும் பர்லி ஆற்றைக் கொண்டு இப்பெயர் வந்தது

**சேரம்பாடி** – சேர அரசைச் சார்ந்த உள்ளூர் தலைவர்கள் ஆண்டதால் இப்பெயர் வந்தது; தேயிலைத் தொழிற்சாலை இங்கு உள்ளது

**குன்னூர்** – குன்று + ஊர் என்பது தான் குன்னூர்; ஒழுங்காக அமையாத உயரமான குன்றுகள் உள்ள ஊர். சிம்ஸ் பூங்கா, லேடி கானிங் சீட், லாம்ஸ் பாறை, டால்ஃபின் மூக்கு, லாஸ் நீர்வீழ்ச்சி, நாய்க்கடி மருந்து நிலையம், காட்டேரி நீர் வீழ்ச்சி ஆகியவை இங்கு உள்ளன

**தேவர் சோலை** – தேயிலைத் தோட்டங்களில் வாழ்பவர்களுக்கு ஒரு சிறந்த அங்காடி இங்கு உள்ளது

**கூடலூர்** – கேரளாவிலிருந்து வரும் நீலாம்பூர் சாலை, சுல்தான் பத்தேரியில் இருந்து வரும் மலைப்பாதை ஆகியவை கூடும் இடம்தான் கூடலூர்

**ஜக்கனாரை** – படகர்களின் தீ மிதிக்கு பெயர் போன ஜடாயசுவாமி கோயில் இங்கு உள்ளது

**காந்தல் சிலுவை** – 22.10.1933 அன்று பாரிஸில் இருந்து வரவழைக்கப்பட்ட சிலுவை காந்தல் கல்லறைக்கு மேல் வைக்கப்பட்டுள்ளது

**கோத்தகிரி** – அக்காலத்தில் கோத்தர்களின் குடியிருப்பு இருந்த இடம்; ஆரோக்கிய புகலிடம்.

**கோடநாடு** – நீலகிரி மலையின் கீழ் சரிவு, சமவெளிகள், தெங்குமரடா, பவானிசாகர் அணை ஆகியவற்றின் ரம்மியமான காட்சிகளை கோடநாடு முனையிலிருந்து காணலாம்

**கோலக்கம்பை** – கொம்பை என்பது குறும்பர் கிராமம்; லாம்டன் உச்சிக்கு அடியில் அழகாக காட்சியளிக்கும் ஊர் (கர்னல் லாம்டன் என்பவர் திரிகோண கணித மேதை)

**குந்தாப்பாலம்** – படகர் மொழியில் குந்தா என்றால் ஆழமான பள்ளத்தாக்கு என்று பெயர்; இங்கு நீர்மின் நிலையம் உள்ளது

**மசினகுடி** – மசினியம்மன் என்ற கிராம தேவதையின் பெயரால் அழைக்கப்படும் ஊர்; காட்டு மிருகங்களும், யானைகளும் அதிகமாக வாழுமிடம்; இந்த இடம் முதுமலை வனவிலங்கு சரணாலயத்துடன் இணைக்கப்பட்டுள்ளது

**மேல்குந்தா** – இங்கு கொய்னாத் தோட்டம் 1863–ல் ஏற்படுத்தப்பட்டது; இப்போது புருக்ஸ்பான்ட் தேயிலைத் தோட்டம் உள்ளது

**மேலூர்** – இங்கு அழகான மகாலிங்க சுவாமி கோயில் உள்ளது

**தெப்பக்காடு** – பயணிகளைப் பெரிதும் ஈர்க்குமிடமான தெப்பக்காடு ஒரு வருவாய் கிராமம். இங்கே விலங்குகளின் சரணாலயம் (முதுமலை வனவிலங்கு சரணாலயம்) உள்ளது. சரணாலயத்தின் மையப்பகுதியான தெப்பக்காட்டில் யானை வாழுமிடம் உள்ளது;

**மூகுர்த்தி மலை உச்சி** – கன்னட மொழியில் வெட்டப்பட்ட மூக்கு என்று பொருள்; ராவணனுடைய தங்கை சூர்ப்பனகையின் வெட்டப்பட்ட மூக்கு இங்கே உள்ளதாகக் கூறுவர்

**நடுவட்டம்** – கொய்னா தொழிற்சாலை இங்கு உள்ளது

**நஞ்சநாடு** – கர்நாடகம் மாநிலத்தில் இருந்து இங்கு வந்து குடியேறிய படகர்களின் கடவுளான நஞ்சுண்டேஸ்வரர் பெயரால் அழைக்கப்படும் ஊர்; 1917–ல் வேளாண் ஆய்வு மையம் இங்கு அமைக்கப்பட்டது

**உதகமண்டலம்** – மலைப்பகுதி மக்களின் மொழியில் 'மந்து' என்றால் கிராமம் என்று பொருள். தொதவர் கிராமமான 'ஒரு பாறை கிராமம்' என்று பொருள் படும் ஒத்தக மந்து என்பதிலிருந்து உதகமண்டலம் என்ற பெயர் வந்தது; திரு. சுல்லீவன் அவர்களால் உதகையிலுள்ள அகன்றப் பள்ளத்தாக்கில் செயற்கையாக ஓர் ஏரி 1823–ல் உருவாக்கப்பட்டது; 1822–ல் திரு. சுல்லிவன் அவர்கள் கட்டிய கல்வீட்டில் சென்னை ஆளுநர் லார்டு நேப்பியர் அவர்களால் 1869–ல் முதன் முதலாகக் கவுன்சில் கூட்டப்பட்டது; 1937 வரை கவுன்சில் கூட்டங்கள் இங்கு நடைபெற்றன; ஆங்கிலேயர் ஆட்சியின் போது இங்குள்ள அரசு இல்லத்தில் ஆளுநர் தங்குவார்

**தொட்டபெட்டா** – தொட்டபெட்டா என்றால் பெரிய மலை என்று பொருள்;

**வெலிங்டன்** – படை வீரர்கள் தங்கும் ராணுவக் குடியிருப்பு 1852–ல் இங்கு அமைக்கப்பட்டது

**அரசு தாவரத் தோட்டம்**

உதகமண்டலத்திலுள்ள அரசு தாவரத் தோட்டம் இந்தியாவில் மட்டுமின்றி கிழக்கு ஆசியாவிலேயே மிக நேர்த்தியான மிக நல்ல தோட்டமாகும். தோட்டத்தின் வரலாறு, உள்ளூர் வாசிகள் சிலர் வீட்டுத் தோட்டமாக அமைத்தபோதே – 1845–ம் ஆண்டிலிருந்தே – ஆரம்பிக்கிறது. இந்தத் தோட்டம் லண்டனிலுள்ள கியூ தோட்டங்களைச் சேர்ந்த (அரச குடும்பத்தைச் சேர்ந்த தாவரத் தோட்டங்கள்) திரு. எம். ஜி. மெக்லோவர் என்பவரால் வடிவமைக்கப்பட்டது. தோட்டத்தின் மத்தியில் சிறிய ஏரிக்குச் சற்றுத் தாழ்வாக, பழங்கால அடிமரம் ஒன்று உள்ளது. தோட்டத்தின் கிழக்கில் ஒரு சில குடிசைகளுடைய தொதவ மந்தும், வடக்கில் உதகமண்டலத்தின் ஒரு பகுதியைக் காணும் வாய்ப்பு தரும் இடமான மர வீடும் உள்ளன. தோட்டத்தின் மொத்தப் பரப்பு 72 ஹெக்டேர். கடல் மட்டத்திற்கு (எம்.எஸ்.எல்) மேல் 2400 முதல் 2500 மீட்டர் உயரத்தில் இத்தோட்டம் உள்ளது. தோட்டத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் மலர்க் கண்காட்சி, நாடு முழுவதிலுமிருந்தும் தாவரவியல், தோட்டக்கலை வல்லுநர்களை மட்டுமின்றி அனைத்துத் தரப்பு மக்களையும் ஈர்க்கிறது. தமிழ்நாடு தோட்டக்கலைத் துறையால் இத்தோட்டம் பராமரிக்கப்படுகிறது.

---

## கண்ணியக்குறைவாக செய்திகள் பதிவிட்ட துணைத் தலைவர் மீது நடவடிக்கை

**05.08.2016 நாளிட்ட கடித நகல்:**

**பெறுநர்**

பொறிஞர் ஆர். முருகேசன்,
துணைத் தலைவர், தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம்

ஐயா,

பொருள் : நெறிகள் – சமூக வலைதளங்களில் (Whatsapp மற்றும் Facebook) கண்ணியக் குறைவான செய்திகளைப் பதிவிடுதல் – கண்டனம் தெரிவிக்கப்பட்டது

பெருமைமிக்க நெடுஞ்சாலைதுறைப் பொறியாளர் சங்கத்தின் மாநிலப் பொறுப்பில் இருக்கும் தங்கள் பெயரில் சமூக வலைதளங்களில் (Whatsapp மற்றும் Facebook) கண்ணியத்திற்குக் கொஞ்சமும் பொருத்தமற்ற சில செய்திகள் அண்மையில் பதிவிடப்பட்டுள்ளன. இதுகுறித்து சங்கத்தின் செயற்குழு ஆழ்ந்து பரிசீலித்தது. தாங்கள் சங்கத்தில் பொறுப்பான பதவியிலிருந்துகொண்டு, சங்க உறுப்பினர்கள் குறிப்பாக மூத்தப் பொறியாளர்களைப் பற்றி கண்ணியக் குறைவான செய்திகளைப் பதிவிட்டது தவறான செயலாகும். இதுபோன்ற செயல்கள் கண்டிக்கத்தக்கது என்று சுட்டிக் காட்டப்படுகிறது. இனிவரும் காலங்களில் இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என்று செயற்குழு எச்சரித்துக் கேட்டுக் கொள்கிறது.

தங்கள் அன்புள்ள

பொதுச் செயலாளர்

## CONTRIBUTION TO "ENGINEERS WELFARE FUND 2014 ATNHE" IN JULY 2016

| S.No. | NAME | DESIGNATION | STATION | AMOUNT |
|---|---|---|---|---|
| 1. | Er.K.Jayalakshmi | DE | Coimbatore | 5000 |
| 2. | Er.K.Balasubramanian | ADE | Ooty | 2500 |
| 3. | Er.K.Kadirvel | AE | Ooty | 2500 |

## LIFE MEMBERS ENROLLED IN JULY 2016
## THE ASSOCIATION WISHES THEM PROSPEROUS CAREER !

| NAME | DESIGNATION | STATION | L.M.No. |
|---|---|---|---|
| Er.R.Venkatesh | Assistant Engineer [H], CMDP | Chennai | 2272 |
| Er.M.Yogavel | Assistant Engineer [NH] | Aruppukottai | 2273 |
| Er.P.Kishorekumar | Assistant Engineer [H], Projects | Chennai | 2274 |
| Er.M.Mithesh | Assistant Engineer [H], CMDP | Chennai | 2275 |
| Er.S.Balakumaran | Assistant Engineer [H], IT Cell | Chennai | 2276 |
| Er.S.Sakthivel | Assistant Engineer [H], IT Cell | Chennai | 2277 |
| Er.S.R.Manikumar | Assistant Engineer [H], TNRSP | Trichy | 2278 |
| Er.T.Subhalekha | Assistant Engineer [H], Planning, Designs & Investigation | Chennai | 2279 |
| Er.M.Arun Prabhu | Assistant Engineer [H], Planning, Designs & Investigation | Chennai | 2280 |
| Er.K.Logeswari | Assistant Engineer [H], Planning, Designs & Investigation | Chennai | 2281 |
| Er.G.C.Gayathri | Assistant Engineer [H], Planning, Designs & Investigation | Chennai | 2282 |
| Er.S.Brindha | Assistant Engineer [H], Planning, Designs & Investigation | Chennai | 2283 |

## THE ASSOCIATION WISHES THE FOLLOWING YOUNG COUPLE LONG AND HAPPY MARRIED LIFE

| BRIDEGROOM | BRIDE | PLACE AND DATE |
|---|---|---|
| Selvan D. Raviprasad, M.Arch.,<br>S/o R. Dhanapal,<br>Pudhukottai | Selvi U. Kaaviyapriya, M.Arch.,<br>D/o Er. K.R. Udayasoorian, B.E.,<br>Superintending Engineer (Retd),<br>Highways, Thanjavur | Sri Aiswaryam Mahal,<br>Thanjavur-7<br>17.08.2016 |

சென்னை வரும்போது நெடுஞ்சாலை இல்லத்தில் தங்குக!